கடலென விளங்கும் வேத காரண குருவைக் கண்டுன்
உடல் பொருள் ஆவி மூன்றும் உகந்தவர்க் குதவி நீதான்
திடமுடன் பூர்த்தி யாகிச் செந்தூ சிற் பரத்திற் சேர்ந்து
நடமிடும் வாசி நாகை நாதரை நாடு நெஞ்சே!

நாசியி னுனியின் மீது நடனமே செய்யுந் தேசி
வாசிவா வென்றே யுன்னுள் வாங்கியே மௌன முற்றுக்
காசிமா நதியுந் தில்லைக் கனவகம் பலமுங் கண்டு
பூசித்து நாகை நாதர் பொன்னடி வணங்கு நெஞ்சே!

தாவுநல் லுதய காலந் தவனன்தே ரெழும்பக் கண்டு
கூவுமாக் குக்கு டங்கள் கூப்பிடு காட்டிற் சம்பு
மேவியே நீயும் அந்த மெய்யறி வறிந்தா யானால்
மூவர்கோ னாகை நாதர் முன்வந்து நிற்பர் நெஞ்சே!

வஞ்சியர் மீதில் ஆசை வைத்திந்த வைய மீதில்
சங்கையில் லாத துன்பச் சாகரந் தனிலே வீழ்ந்தாய்;
நங்கைமேல் வைத்த பாசம் நாயன்மேல் வைத்து நீயும்
செங்கையால் நாகை நாதர் சீர்பதந் தொழுவாய் நெஞ்சே!

அன்றிலும் பேடும் போல அடிமையுங் குருவுங் கூடிப்
பொண்டிருந் தடிமூ லத்திற் குதித்தெழு வாசி யாடக்
கண்டிமை யாத நாட்டக் கருணையால் வெளியி லேறிப்
பண்டித நாகை நாத லிங்கரைப் பணிவாய் நெஞ்சே!

குலங்கெட்டுப் பாசங் கெட்டுக் கோத்திர பேதங் கெட்டு
மலங்கெட்டுக் கோபங் கெட்டு மங்கையர் ஆசை கெட்டுத்
தலங்கெட்டுத் தானுங் கெட்டுத் தனக்குள்ளே வெறும்பா ழாகிப்
பலங்கெட்டுத் நாகை நாதர் பதங்கொள்வார் பெரியோர் நெஞ்சே

ஓமெனும் பிரண வத்துள் உதித்தவைந் தெழுத்து மாகி
ஆமெனும் அகார பீடத் தமர்ந்திடு வாசி கண்டே
ஊமெனு மௌனமுற்றே யூறிடு மதிப்பா லுண்டு
தாமெனு நாகை நாதர் தாண்டவம் பார்ப்பாய் நெஞ்சே!

அலைதனிற் றுரும்புபோலும் ஆலைவாய்க் கரும்பு போலும்
வலைதனில் மானைப் போலும் மயங்கிநைந் தலைந்தாய் நீதான்;
உலைதனில் மெழுகைப் போலும் உருகிமெய்ப் பொருளை யுன்னி
நிலைதனி னின்று நாகை லிங்கரைக் காண்பாய் நெஞ்சே!

பொறிவவி யலைந்து மீளும் புலன்களை அடக்கி ஞான
அறிவெனும் விழியி னாலே அம்பர வெளியைப் பார்த்தே
உறிதனி லிருக்குங் கள்ளை உண்டுதற் போதம் விட்டு
நெறிதரு நாகை நாதர் நிலைமைகண் டறிவாய் நெஞ்சே!

ஆயாத நூல்க ளெல்லாம் ஆய்ந்துநீ பார்த்துங் காமத்
தீயான குழியில் வீழ்ந்து செனனமுற் றலைந்தா யுன்னின்
காயாத பாலை யுண்டு கனகவம் பலத்தைக் கண்டு
மாயாமா நாகை நாதர் மலரடி வணங்கு நெஞ்சே!

ஆதார மாறுந் தாண்டி ஐம்பூத வடிவுந் தாண்டி
மீதான வெளியுந் தாண்டி விளங்கிய பரன்றன் கூத்தை
நீதானும் அறிந்து கொண்டு நின்மல வடிவ மாகி
வேதாந்த நாகை நாதர் மெல்லடி வெளிபார் நெஞ்சே!

பார்த்திடுந் திசைக ளெங்கும் பராபர வெளிதான் கூடிக்
கோத்திடும் வடிவை ஞான குருவினா லறிந்து கொண்டு
பேர்த்திடு மியையா நாட்டத் திருந்துபே ரின்ப வெள்ளம்
பார்த்திட மூழ்கி நாகை லிங்கரை வணங்கு நெஞ்சே!

சச்சிதா னந்த மான சற்குரு பதத்தைப் போற்றிக்
கச்சிமா நகர மூலக் கனல் விளக் கதனை யேற்றி
உச்சிமேல் வைத்துப் பார்வை யுணர்வினால் வெளியி லுன்னித்
தச்சிலா வீட்டில் நாகை லிங்கரைத் தழுவு நெஞ்சே!

மாரின்ப முலையா ளோடு மன்றிலே நடஞ்செய் வோனைப்
பேரின்ப வீட்டைக் கண்டு பிரணவ விளக்கை யேற்றிச்
சேரின்ப வெளியில் வாசித் திருவிளை யாடல் பார்த்தால்
ஓரின்ப நாகை நாதர்க் குவந்துவந் துரைப்பார் நெஞ்சே!

நாயனை யறிந்தி டாமல் நானென்னும் ஆண்மை யாலே
ஆயனில் லாத காலி யாகிநீ யலைய லுற்றாய்;
காயமே கோயி லாகக் கலந்திருந் தவனைக் கண்டு
மாயொணா வாழ்க்கை நாகை நாதரை வணங்கு நெஞ்சே!

உருப்படுங் கல்லும் செம்பும் உண்மையாய்த் தெய்வ மென்றே
மருப்புமுனை மலரைச் சூட்டி மணியாட்டித் தூபங் காட்டி
விருப்பமுற் றலைந்தாய் அந்த வினைமயல் விட்டு நின்னுள்
இருப்பவர் நாகை நாதர் இணையடி பூசி நெஞ்சே!

உனைவிட வேறே தெய்வம் உண்டென உலகிற் றேடும்
நினைவதே தெய்வ மாகி நீகண்டு நின்றா யானால்
சென்னமாம் பிறவி போகும்; சிவத்துள்ளே சேர்க்கு மெங்கோன்;
மனமகிழ் வாசி நாகை நாதர்தாள் வணங்கு நெஞ்சே!

ஆசையாம் பாச மாயை அறிவதை மயக்கி யுன்னுள்
ஈசனைத் தேடொட் டாம லிருக்குமவ் விருளைப் போக்கிக்
கோசமா குறியை நோக்கிக் குருபரன் வடிவைக் கண்டு
வாசமா மலரால் நாகை நாதரை வணங்கு நெஞ்சே!

கன்றதைத் தேடுங் காறுங்காலியைப் போலே யுன்னுள்
நின்றபே ரொளியைக் கண்டு நினைவெனு மறிவாற் றெய்வம்
ஒன்றெனக் கண்டா யானால் உமையவ ளுடனே தில்லை
மன்றினுள் ஆடும் நாகை நாதர்முன் வருவார் நெஞ்சே!

மடைவாயிற் பட்சி போலே மனந்தனை யடக்கி வாசி
விடையேறு மீசன் பாதம் விரும்பிய பெரியோர் பின்னே
தடையறத் திருந்து ஞான சாதகம் பெற்று நீதான்
புடைசூழ நாகை நாதர் பொன்னடி போற்று நெஞ்சே!

சிரமெனுங் குகையி னுள்ளே சிவகயி லாய மன்றில்
அரனிட மமையும் வாசி யாடல்தான் செய்வா ரென்று
பரமமெய்ஞ் ஞான நூல்கள் பகர்வதை யறிந்து பார்த்து
வரமிகு நாகை நாதர் மலரடி வணங்கு நெஞ்சே!

கடமதில் நிறைந்து நின்ற கனவொளி போலே யுன்றன்
செடமதில் நிறைந்து நின்ற சீவனை யறிவாற் கண்டு
திடமிகு சீவ சாட்சி தரிக்கச் சீவன் முத்தி
இடமரு நாகை நாத ரிணையடி யுணர்வாய் நெஞ்சே!

மெய்யருள் விளங்குட் சோதி வெளிதனை அறிவாலுன்னி
ஐயமில் லாமற் காண்போ ரவரின்ப முத்த ரென்று
துய்யமெய்ஞ் ஞான நூல்கள் சொல்வதாற் பரத்தை நோக்கிச்
செய்யதாள் வாசி நாகை லிங்கரைத் தெரிசி நெஞ்சே!

முந்தின பிறப்பு வந்த முதன்மையும் அறியாய் இப்பால்
பிந்தின பிறப்பு வந்த பெருமையும் அறியாய் நீதான்;
அந்தரப் பட்சி போல அலைகின்றாய் அகத்து ளேமுச்
சந்தியை அறிந்து நாகை நாதரைச் சார்வாய் நெஞ்சே!

காகத்தின் கண்ணி ரண்டிற் காண்பதுங் கண்ணொன் றேபோல்
தேகத்தின் அறிவின் கண்ணைத் திடமுடன் அறிந்து கொண்டு
மோகத்தின் கனவிலி வீழா முனைசுழி வாசி வார்த்தால்
ஏகத்தால் நாகை நாத ரிணையடி சார்வாய் நெஞ்சே!
ஒட்டிலே பட்ட பட்சி உழல்கின்ற நெறிபோ லாசைக்
கட்டிலே மயங்கி மாறாக் கவலையுற் றலைந்தாய் நீதான்;
நெட்டிலே யோடு வாசி நிலைமையாய் நிறுத்தி மேரு
வடடிலே நாகை நாதர் வாழ்பதி அறிவாய் நெஞ்சே!
ஆனைவாய்க் கரும்பு போலும் அரவின்வாய்த் தேரை போலும்
பூனைவா யெலியைப் போலும் புவியில்நைந் தலைந்தாய் ஞானத்
தேனைவாய் அருந்தி முத்தி சேரந்திடச் சிவத்தை நோக்கி
ஊனுளே நாகை நாதர் உற்றிட மறிவாய் நெஞ்சே!

மித்திர குருக்கள் சொல்லை மெய்யொன்று கல்லை வைத்துப்
பத்திர புட்பஞ் சார்த்திப் பணிந்திடும் பாவை நீதான்;
சித்திரப் பதுமை போலுஞ் செய்தொழி லொடுங்கி நின்று
புத்தியாய் நாகை நாதர் பொன்னடி போற்று நெஞ்சே!

உப்போடு புளிப்பும் கைப்பும் உணர்வினால் அறிந்து நீதான்
எப்போது முனுக்குள் நாயன் இருப்பிடம் அறியா தென்னே?
முப்போதுங் குருவைப் போற்றி\முனைசுழி வாசி பார்த்தால்
அப்போது நாகை நாதர் அடியிணை அறிவாய் நெஞ்சே!

படிக்கவும் நாவி ருக்கப் பணியவுஞ் சிரமி ருக்கப்
பிடிக்கவுங் கரமி ருக்கப் பேணவுங் குருவி ருக்க
நடிக்கவுந் தாளி ருக்க நாடவுங் கண்ணி ருக்க
இடுக்கமுற் றலைந்தாய் நாகை நாதரை இறைஞ்சு நெஞ்சே!

அருவுரு வில்லா நாயன் அணுவினுக் கணுவாய் நின்றும்
மருவுபல் லுயிர்கட் கெல்லாம் வடிவுவே றான தன்மை
ஒருவரு மறியார்; நல்லோர் உறுதியா லறிவார்; ஞான
குருபர நாகை நாதர் குறிப்பறிந் துணர்வாய் நெஞ்சே!

ஆண்டொரு நூறு கற்பம் ஒளடத மூலி யுண்டு
நீண்டதோர் காய சித்தி நெடுநாளைக் கிருந்த பேரும்
மாண்டுதான் போவா ரல்லால் வையகத் திருப்பா ருண்டோ?
தீண்டொணா நாகை நாதர் சீர்ப்பதந் தேடு நெஞ்சே!

பொருள்தனைத் தேடிப் பாரிற் புதைக்கின்ற புத்தி போன்மெய்
அருள்தனை நிதமுந் தேடி அரனடி யதனில் வைத்தால்
இருள்தனை அகற்றுஞ் சோதி எம்பிரான் முன்னே வந்துன்
மருள்தனை மாற்றும் நாகை நாதரை வணங்கு நெஞ்சே!

ஆண்டியின் வேடந் தானும் அறிவுடன் எடுத்தி டாமல்
தூண்டிலில் மீனைப் போலத் துள்ளி வீழ்ந்தலைந்தாய் நீதான்
வேண்டிய போது நாயன் மெல்லடி வெளித்தாய்த் தோன்றும்;
தாண்டிய வாசி நாகை நாதரைத் தழுவாய் நெஞ்சே!

சேற்றிலே நுழைந்தி ருந்த சிறுபிள்ளைப் பூச்சிபோலும்
நீற்றிலே நுழைந்தி ருந்த நேர்மையாம் அழற்சி போலும்
மாற்றுபே ருலகில் நல்லோர் மருவிரி மருவார் சித்தத்
தேற்றியே நாகை நாதர் இணையடி வைப்பாய் நெஞ்சே!

நாடகப் பெண்ணை ஆட்டும் நட்டுவன் போலே யுன்றன்
கூடகச் சடத்தை யாட்டுங் குருவைநீ அறிந்தி டாமல்
மூடக மானாய் ஞான முதல்வனை அறிவால் தேடி
ஆடக நாகை நாதர் அடியிணை பணிவாய் நெஞ்சே!

சத்தியுஞ் சிவமு மாகித் தாண்டவ மாடும் வாசி
சுத்திய மூல நாடிச் சுழுமுனைக் கம்பத் துள்ளே
புத்தியைச் செலுத்தி மேலாம் பொருள்தனை யெடுக்க வல்லார்
பத்திசெய் நாகை நாதர் பதிதனைப் பார்ப்பாய் நெஞ்சே!

நாட்டமாய் அறிவின் கண்ணால் நாயனைப் பருகிப் பார்த்துத்
தேட்டமாங் கருணை பெற்ற சிவனடி யார்கள் தங்கள்
கூட்டமாம் பரத்திற் சென்று குருபணி விடையுஞ் செய்கொண்
டாட்டமா நாகை நாதர் அருள்தர வருவார் நெஞ்சே!

காலனை உதைத்த நாயன் காலெனும் வாசி தாளை
மூலநன் மனையிற் கண்டு முப்பதி முப்பாழ் தாண்டிப்
பாலமு தருந்த மேலாம் பராபரை பாதம் போற்றி
மாலயன் அறியா நாகை நாதரை வணங்கு நெஞ்சே!

கடுமையாம் பகட்டி லேறிக் கயிற்றொடு சூல மேந்திக்
கொடுமையாங் காலன் வந்து கொண்டுபோம் முன்னே நீதான்
அடிமையா நாதன் பாதம் அனுதினம் மறவா தேத்தில்
நெடுமையா நாகை நாதர் நிலைமைகண் டறிவாய் நெஞ்சே!

அரகரா சிவசி வாவென் றனுதினம் மறவா தேத்திச்
சிரகயி லாய வீட்டிற் சிவனைநீ அறிந்து தேடில்
மரகத வல்லி பங்கன் வந்துமுன் காட்சி நல்கிப்
பரகதி கொடுக்கும் நாகை நாதரைப் பணிவாய் நெஞ்சே!

நடக்கிலும் வாசி பாரு; நாட்டமும் வாசி பாரு;
முடக்கிலும் வாசி பாரு; முனிசுழி வாசி பாரு;
மடக்கிலும் வாசி பாரு; மறவிலும் வாசி பாரு;
திடக்குரு நாகை நாதர் திருநடஞ் செய்வார் நெஞ்சே!

போனநாள் வீணாய் போனாற் புதியநாள் கெடவி டாமல்
ஞானநாள் இதுதா னென்று நாடெங்கும் குருவைப் போற்றி
வானநா எத்திற் சென்னி வழிகண்டு மதிப்பா லூறும்
தேனைநன் கருந்தி நாகை லிங்கரைத் தெரிசி நெஞ்சே!

தராதல மெல்லாந் தானாய்த் தாவர சங்க மங்கள்
நிராமய மாகக் கோத்து நின்றதோர் பொருளா மந்தப்
பராபர வடிவங் கண்டு பரத்துளெ யடக்கி மேலாம்
புராதன மூர்த்தி நாகை லிங்கரைப் போற்று நெஞ்சே!

மாணிக்க வாச கர்க்கும் மகிழ்பரஞ் சுந்த ரர்க்கும்
ஆணிப்பொன் திருமூ லர்க்கும் அறுபத்து மூவ ருக்கும்
பேணிக்கொள் பெரியோ ருக்கும் பேறருள் சிவனை யுன்னுள்
தோணக்கண் டிருந்து நாகை லிங்கரைத் தொழுவாய் நெஞ்சே!

மகத்துவம் அடைந்த நெஞ்சே! மலமாயை கொண்ட நெஞ்சே!
பகுத்தறி வில்லா நெஞ்சே! பலநினை வான நெஞ்சே!
மிகுத்திடு காம நெஞ்சே! மெய்ப்பொருள் அறியா நெஞ்சே!
செகத்தினில் நாகை நாதர் சீர்பதந் தேடு நெஞ்சே!

காலது மேல தாகக் கனியுண்ணும் வெளவால் போல
மூலநல் வாசி யோடு முறைமையை அறிவாற் கண்டு
சீலமெஞ் ஞான போத சிவயோகந் தன்னைப் பார்த்து
ஞாலமேல் நாகை நாதர் நடனமுங் காண்பாய் நெஞ்சே!

உறக்கமும் விழிப்பும் போல உடல்பிறந் திறக்குந் தன்மை
சிறக்கவே அறிந்து மிந்தச் செகவாழ்வை மெய்யென் றெண்ணிக்
குறித்தலை குலாமர் சொல்லைக் குறிப்புடன் நம்ப லாமோ?
மறக்கொணா நாகை நாதர் மலர்டி வணங்கு நெஞ்சே!

எத்தனை புத்தி சொல்லி எடுத்தெடுத் துரைத்தும் நீதான்
பித்தனைப் போலே யோடிப் பிறவிசா கரத்தில் வீழ்ந்தாய்;
முத்தமிழ் நாகை நாதர் முண்டக மலர்த்தாள் போற்றிச்
சத்தமுன் னுடலிற் றோற்றுந் தலந்தனைப் பார்ப்பாய் நெஞ்சே!

சுவர்த்தலைப் பூனை போலச் சுற்றிய பிறவி தீரத்
தவத்தினுக் குருவ மான சற்குரு தாளைப் போற்றிச்
சிவத்துடன் கலந்து மேவிச் சிதம்பர வழியே சென்றிங்
கெவர்க்குமே லான நாகை நாதரை வணங்கு நெஞ்சே!

அலைவாயிற் பூடு போலும் ஆனைவாய்க் கவளம் போலும்
வலைவாயில் மிருகம் போலும் மயங்கிநைந் தலைந்தாய் நீதான்;
உலைவாயில் மெழுகைப் போல உருகிமெய்ப் பொருளை
யுன்னிப்
பலகாலு மேத்தி நாகை லிங்கரைப் பணிவாய் நெஞ்சே!

மூலமாம் நகர மீதில் முளைத்தெழுஞ் சுடரைக் கண்டு
காலத்தீ மேலே யேற்றிக் கபாலத்தே னமுத ருந்திக்
கோலமா மதுவே யுண்டு குருபதந் தன்னிற் சேர்ந்து

வாலசுந் தரியால் நாகை லிங்கரை வணங்கு நெஞ்சே!
இறந்திடும் இருபத் தோரா யிரத்தறு நூறு பேரும்
இறந்திடிற் காயம் போனா லீசனைக் காண்ப தெந்நாள்?
மறந்திடா தறிவால் மூல வாசியை மேலே யேற்றிச்
சிறந்தசிற் பரத்து நாகை லிங்கரைத் தெரிசி நெஞ்சே!

நூற் பயன்

கதிகரு மூலா தாரக் கணபதி தாசன் சொன்ன
நிதிமணி மாலை யான நெஞ்சறி விளக்கம் நூறும்
துதிசெயும் அறிவோர் ஞான சோதியின் வடிவ மாக
மதியணி நாகை நாதர் மலர்ப்பதம் பெற்று வாழ்வார்!

நித்தியப் பொருளதான நெஞ்சறி விளக்கம் நூறும்
பத்தியாய் மனத்தி லெண்ணிப் படித்ததன் பயன்காண் போர்கள்
முத்திமெய்ஞ் ஞானம் பெற்று மூவர்க்கும் முதல்வ ராகிச்
சத்தியுஞ் சிவமுந் தோன்றுந் தற்பர மதனுட் சார்வர்.

கனகமார் மணிசேர் மூல கணபதி தாச னாக
நினைவினா லறிகட் செப்பும் நெஞ்சறி விளக்கம் நூறும்
வினவியே படிப்போர் கேட்போர் வினையெலாம் அகன்று
மெய்யுற்
பனமெனும் மோட்சம் நாலாம் பதம்பெற்றுப் பதத்துள் வாழ்வார்.

இவ்வாறு நூற்பயனோடு இந்நூல் முடிவுறுகின்றது. பல்வேறு ஞான நூல்களிலே கூறப்பெற்றுள்ள பல பேருண்மைகளும், சித்தர்களின் அறிவியலிலே உள்ள பல துறைகளின் இரகசியங்களும், இந்த மூன்று நூல்களிலும் தொகுத்துக் கூறியிருப்பது, சித்தர் இலக்கியத்தை ஆய்வாருக்கும், இந்தப் பயிற்சி முறைகளிலே ஈடுபடுவார்க்கும் ஒருங்கே பயன்தரும். முக்கியமாக நெஞ்சறி விளக்கத்தின் பாடல்கள் மனப்பாடம் செய்வதற்குரிய கவிநடையும், ஞானப் பொருட் செறிவும் இணைந்து இலங்குகின்றன!

6. அறிவிலே இரண்டு வகை

இறை அறிவு என்ற இயலிலே இரண்டு முக்கியமான பிரிவுகள் உண்டு. பிரிவுகள் முக்கியமானவை என்பதோடு கூட, அந்தப் பிரிவுகள் உணர்த்தும் பொருளும் முக்கியமானதாகும்.

நம் தமிழகத்தினில் பல நூறு ஆண்டுகளாக வழங்கிவருகிற இறைஞானம் பற்றிய நூல்கள் அனைத்தும், அடிப்படையிலே இந்த இரண்டு பிரிவுகளில் அடங்கிவிடும்.

இறைவன் ஒருவனே எனினும் அவனைப் பற்றிய நூல்கள் இரண்டாகப் பிரிகின்றன. ஒரே பொருளை இயம்புகின்ற நூல்களாக இருப்பினும், இந்த இரண்டும் தங்களுடைய அணுகுமுறையிலும், பொருளாட்சியிலும், விளக்கங்களிலும் வேறுபடுகின்றன.

பலநூறு அறிஞர்கள் இயற்றியுள்ள, பல நூறு நூல்களும் இந்த இரண்டு பிரிவுகளிலே அடங்கி, இரண்டு குரல்களிலே பேசுகின்றன. ஒரு குரல் கல்வியின் குரல்; மற்றொரு குரல் துய்ப்பின் குரல். ஒன்று மூளையின் பேச்சு; மற்றொன்று இதயத்தின் பேச்சு. ஒன்று படிப்பு; மற்றொன்று அநுபவம்.

தமிழ் மொழியிலும் வடமொழியிலும் ஏராளமான நூல்கள்இந்த இரண்டு பிரிவுகளிலும் தோன்றி வழங்கி வருகின்றன. இவற்றின் குறிக்கோள் இவற்றைக் கற்பவனுக்கு இறைஞானத்தை வழங்க வேண்டும் என்பதே ஆகும்.

நம்முடைய நாட்டு ஆகமங்களிலும் பூர்வ பக்கம் என்றும் உத்திர பக்கம் என்றும் இரண்டு வகை உள்ளன. இவற்றைக் கற்றுத் தேர்ந்த சமயவாதிகளைப் பூர்வபக்க சைவர்கள் என்றும் உத்திரபக்க சைவர்கள் என்றும் அழைக்கிறார்கள்.

இத்தகைய இரண்டு பிரிவுகள் ஏன் தோன்றின என்றால், சாதாரண நிலையில் உள்ள சாமானிய மக்களுக்கு, இறைவனைக் காணுவதற்கு வேண்டிய முறைகளை எளிமையாக்கிச் சொல்ல வேண்டிய அவசியம் உள்ளது. இவர்களால் நுட்பமான நெறிகளைக் கடைப்பிடித்து அரூப நிலையிலே நின்று அறிவுக்கு அறிவான இறைவனைக் காணுகின்ற நுண்ணிய முறைகள் எடுபடமாட்டா. எனவே, இத்தகைய நிலையிலுள்ள சாமானியர்களுக்கு நம்முடைய ஆகமங்கள், பூர்வ பக்கம் என்ற முறையிலே ஆலய வழிபாடு, விரதங்கள், சடங்குகள், கடவுட் தொண்டு, விழாக்கள், பொது வழிபாடு முதலான எளிய வகைகளை உணர்த்துகின்றன. சாமானிய மக்களின்

ஆற்றலுக்கு இசைந்த முறைகள் இவையே ஆம். யோக முறைகளும், ஞான வழிபாடுகளும் இந்த மக்களுக்குப் பயன்பட மாட்டா.

அறிவிலும் ஆர்வத்திலும் மேம்பட்ட மக்களுக்கு வெறும் சடங்குகளையும் விரதங்களையும் சொல்லிப் பயனில்லை. அவர்கள் தீவிர நிலையில் உள்ள மக்கள். அவர்களுக்கென்று இறைவனை உணர்த்துவதற்காக வேறு நெறிமுறைகளை ஆசிரியர்கள் கையாள வேண்டிய அவசியம் இருக்கிறது.

மக்களுடைய மனநிலையும் பண்பாடும் அறிவியலிலே இத்தகைய இரண்டு பிரிவை உண்டாக்கி, இரண்டு வகையான அறிவுறுத்து முறைகளைத் தோற்றுவித்துள்ளன.

வடமொழியில் முன்னைய நூல்களைப் 'புரோட்ச' நூல்கள் என்றும், பின்னைய நூல்களை 'அபரோட்ச' நூல்கள் என்றும் அழைக்கிறார்கள். இதையொட்டி ஞானத்தையும் இரண்டாகப் பிரித்து, 'புரோட்ச ஞானம்', 'அபரோட்ச ஞானம்' என்று அழைக்கிறார்கள்.

கண்ணால் காண முடியாத கடவுளைப் பற்றிப் பற்பல சிறப்புக்களை எடுத்துக் கூறி, கோவில் வழிபாடு, கோவிலிலே செய்கிற தொண்டு முதலியவற்றை இயம்பி, பலவிதமான கிரியைகளைச் சொல்லி இறைவனை அடைவதற்குரிய மார்க்கம் இது என்று அறிவுறுத்துவது 'புரோட்ச ஞானம்' எனப்படும்.

இந்த நூல்களில் இறைவனைப் பற்றிய ஆர்வத்தை வளர்க்கும் முறைகளைச் சொல்லி, வளர்க்க வேண்டியதன் அவசியத்தை உவமைகளாலும், தருக்க வாதங்களாலும் எடுத்துக் கூறுவது உண்டு. காணாததை இயம்புவதற்கு, கண்டவற்றை உவமை சொல்லி, கண்முன் தெரிகின்ற பொருள்களைக் கொண்டு கிரியைகளை வகுத்து எல்லா மக்களுக்கும் பயன்படக் கூடிய விதத்தில் இந்த வகையான 'புரோட்ச ஞான' நூல்கள் எழுந்துள்ளன.

தீவர நிலையிலுள்ள மக்களுக்கு இந்த நூல்கள் கவர்ச்சி தர மாட்டா. அவர்களுக்கு உபதேசம் செய்கிற பொருளை அநுபவத்திலே காட்டினால் ஒழிய, அவர்களுடைய மனம் அந்தப் பொருளிலே ஈடுபடமாட்டாது. அறிவுக்கு அறிவான பேரறிவை, அறிவுகொண்டு கற்பித்தரல் மட்டும் போதாமல், அந்தப் பொருளை அவர்களுடைய அறிவுக்குள்ளே தேடும்படி பதிக்கவேண்டும். இத்தகைய தீவிர நிலையில் உள்ள மக்களுக்காக எழுந்த நூல்களே 'அபரோட்ச ஞான' நூல்கள்.

சித்தர் இலக்கியத்திலே இந்த இரண்டு வகையான நூல்களையும் காண்கிறோம். இறைவனைச் சாதாரண நிலையிலே வழிபட்டு, இறையுணர்வு வளரும்படி செய்கின்ற நூல்கள் பெரும்பாலும் புகழ் நூல் வடிவிலும், எளிய வழிபாட்டுச் சடங்கு நூல்கள் வடிவிலும் திகழ்கின்றன. இத்தகைய நூல்களும் சித்தர் இலக்கியத்தில் ஒரு

பகுதியாக அடங்கியுள்ளன. ஆனால் சித்தர் இலக்கியத்தின் செம்பகுதி, 'அபரோட்ச ஞான' நூல்களின் வடிவிலேயே விளங்குகின்றன.

'புரோட்ச ஞான'த்தை வழங்கி, எல்லா அறிவு நிலையிலுமுள்ள சாமானிய மக்களுக்கும் பயன்படக்கூடிய விதத்தில் எழுந்த நூல்களின் ஆசான்களுக்கு 'போதகுரு' என்று சித்தர் இலக்கியம் பெயர் சூட்டுகின்றது.

இங்ஙனமின்றி, தீவரமான வேட்கையுடைய சீடனுக்கு அவனுடைய அறிவிலேயே இறைமையைப் புலப்படுத்தி, எழுத்தில் உள்ளதை அநுபவத்திலே தரக்கூடிய குருவை நம்முடைய ஞானிகள் 'அவபோதகன்' என்று அழைத்தார்கள்.

முதலாவது நெறியை உணர்த்துகிற ஆசான், பாடல்கள் மூலமும் தர்க்கங்களின் வாயிலாகவும் சீடனுடைய உள்ளத்தில் இறையார்வத்தை வலிமையுறச் செய்து பற்பல கிரியைகள் வாயிலாக அவனுடைய வேட்கையைத் தணிக்க முனைகிறான். இரண்டாவது வகையான ஆசானோ என்றால், வெறும் நூலறிவைப் பேசுவதோடு நில்லாமல், தன்னுடைய சீடனின் உள்ளத்தில் உறங்கிக்கொண்டு இருக்கின்ற உள் ஆற்றல்களை விழிக்கச் செய்து, ஒளியின் அலைகளையும் ஒலியின் அலைகளையும் எழுப்பி, அவனுடைய அறிவுக்குள்ளே பேரறிவு கிளரச் செய்து, அவனுடைய அகவுணர்விலே இறைமையைப் பதிக்கிறான்.

சித்தர் இலக்கியத்தின் ஒண்மை மிக்க நூல்கள் பலவும் இரண்டாவது வகையிலான அநுபவ ஞானிகளின் வெளியீடுகள் என்பதை நாம் மறந்துவிடக் கூடாது. வடமொழியார் சொல்லுகிற, 'அபரோட்ச அநுபூதி' என்னும் நிலையே இத்தகைய நூல்களின் குறிக்கோளாகும். இதுவே அறிவுக்கு அறிவான பேரறிவை அறிவுக்கண்ணால் காணவும், உணர்வுக்கு உணர்வான பேருணர்வை உணர்வினால் துய்க்கவும், கைகொடுத்து உதவுகிறது. இதுவே சித்தர் இலக்கியத்தின் மாட்சி மிக்க சிறப்பாகும்.

இத்தகைய ஞான குரு ஒருவனுக்குக் கிட்டும்பொழுது அவன் சித்தர்கள் கூறுகிற ஒளியையும், சித்தர் இலக்கியத் பேசுகிற ஒலியையும் காணவும் கேட்கவும் தலைப்படுகிறான். தன்னுடைய பயிற்சியின் மூலம், சிவசூரியன் எனவும், சிவகுரு எனவும், அருட்பெரும்சோதி அல்லது ஆன்மசோதி எனவும் அழைக்கப்படுகிற அறிவுருவான இறைமைக் காட்சியைக் காணத் தொடங்குகின்றான். அவனுடைய உட்செவிகளிலே இறை ஒலிகள், கேட்கத் தொடங்குகின்றன. இத்தகைய இன்பத் துடிப்பே சித்தர் இலக்கியத்தின் குறிக்கோளும் பயனும் என்பதைத் தமிழகத்தில் மட்டுமல்லாமல் உலகெங்கிலும் உள்ள சித்தர் கணம் வற்புறுத்திக் கூறியுள்ளது. இந்த ஞானமே உலக நாடுகள் அனைத்துக்கும் பொதுவானதும், உலகச் சமயங்கள் அனைத்துக்கும் பொதுவுடைமையானதும் ஆகிய, சித்தர் ஞானம், இந்த ஞானத்தைப் பற்றி சிவயோகி இரத்தினசபாபதியார் மிக அருமையான ஒரு குறிப்புத் தருகிறார். அது வருமாறு:

"இத்தகைய ஞானம் கைவரப் பெற்றோர் உணர்த்தும் அறிவுக்கு 'அவபோத ரூபம்' என்று பெயர். அதாவது, சொற்களால் உணர்த்தாது, சீடனிடம் ஒரு அனுபவ அறிவைப் பதித்தல் என்று பொருள். குரு தனது பார்வையாலும் பரிசத்தாலும் சீடனிடம் அடங்கிக் கிடந்த ஓர் அகண்டாகார சத்தியை எழுப்புவர். அதனால் சீவனின் தேகத்திலும் சிரசிலும் ஒருவகையான உணர்வு உதித்து விடும். அது ஒரு இன்ப நிலையாகவும் விளங்கும். அதன் வழியே சாதனம் முதிர்ந்தால் அறிவில் தசநாதங்களுதிக்கும். இதை அறியும்போது நாத சம்மியம் என்பர். இதன் முடிவு நாதாந்தமாகும். சைவம் கூறும் உத்தர ஞானம் இதுவாகும்.

திபெத்திய லாமாக்கள் இந்நாத சம்மியத்தைச் 'சுரோதா பத்தி' என்பர். சுரோதாபத்தியால் நாதாந்தம் கைவரப் பெற்றவர். அணிமாதி சித்திகளுடன் கூடிய அவலோகீஸ்வரர் பதவியைப் பெற்றும் அழியாத நிலையைப் பெறுவர் என்பர். இது சைவ நூல்கள் கூறும் அணு சதாசிவர்கள் போன்ற பதமாகும். காஷ்மீர் சைவம் இதைப் 'பிரத்தய பிஞ்ஞை' என்று கூறிற்று. அதன் பொருள் தனி வியக்தியின் அறிவை உயர்த்துவதில் அகண்ட அறிவுடன் ஒன்றுதல் என்ற கருத்தேயாகும். சாத்த நூல்கள் இவ்வித்தையைச் 'சந்திர்ஞானம்' என்று பெயரிட்டன. சந்திரனே அஞ்ஞான தசையில் மனிதனின் வீரியமாகவும் தன்னை அறிந்த ஞானிக்குச் சிரசில் உள்ள சோழ மண்டலமாகவும், அதீத நிலையில் சீவ சாட்சியான ஆத்ம சோதியாகவும் உள்ளான். சீவ சாட்சி நிலையைச் சைவ நூல் சிவசாதாக்கியம் என்று சதாசிவ ரூபத்தில் விளக்கிற்று. சித்தர் பரிபாஷையில் அகர கலை என்றனர். அகரம், சந்திரனை உணர்த்தும் குறியீடு. சித்பத்தி ஸ்பந்த ரூபமாக (ஒரு சிறு அசைவாக) மூளையில் தொழிற்படுகிறது. காரிய ரூபமான போது குண்டலினியாக மூலாதாரத்திலிருந்து கொண்டு தொழிற்படுகிறது. ஞானதேகப் பிரக்ஞையை விட்டவனாக விளங்கும்போது, குண்டலினியின் ஆற்றலும் சித்சத்தியின் ஆற்றலும் சமமாகப் பொருந்தியே சோழ மண்டல ஒளியை உண்டாக்குகின்றது. ஒரு சத்தியே தொழில் வேறுபாட்டால் வேறு வேறு தன்மையைப் பெறுகின்றது என்பது ஞானிகளின் முடிவு. அதனால் உருவத்தால் விளக்கும் சத்திக்கும் உருவ மற்ற அறிவுக்கும் சமவாய விளக்கத்தைச் சிவசக்தி என்று காட்டினர். சூரியனை விட்ட ஒளி எவ்விதம் இருக்க முடியாதோ அவ்விதமே அறிவை விட்ட வேறு ஒரு சக்தி தனியாக இல்லை. அத்தகைய அகரம் எண்ணைக் குறிப்பிடும்போது எட்டு என்ற எண்ணைக் குறிக்கும். அது போலவே உகரம் இரண்டு என்ற எண்ணைக் குறிக்கும். இவைகள் பஞ்சபூதமான ஐந்தும் ஒவ்வொரு வகை அறிவாளியுடன் கூடியவை. தேகத்தில் உள்ள சூரிய ஒளி, சந்திர ஒளி, ஆத்ம வொளிகளிலும் ஒவ்வொரு வகையான ஆற்றலும்

அறிவும் பொருந்தியுள்ளது என்பதை அட்டமூர்த்தம் என்ற விளக்கினர். சமஷ்டி உருவம், வியஷ்டி உருவம் என்ற இரு சத்திகளையும் உகாரத்தில் அடக்கிக் காட்டினர். அதனால் நிராதார நிலையில் ஆகாய மண்டலத்தில் சர்வ வியாபகமான சிவசக்தியைச் சமஷ்டியாக்கி ஆத்மாவை வியட்டி நிலையை விட்டு மாற உபாயம் கூறினர். இவ்வித அகர உகர பாதங்களால் அமைவது ஓகாரம் என்ற பிரணவமாகும். பிரணவ ஞானமே உண்மையான ஞானம் என்று வேதங்கள் அறுதியிட்டுப் பிரணவத்தை வேத சிரசு என்று கூறிற்று. இத்தகைய பிரணவ உபாசனையைத் தோத்திரமுறையில் தமிழில் சிறப்புற விளக்குவது திருவாசகமும், சாத்திர முறையில் சிறப்புற விளக்குவது திருமந்திரமுமாகும்.

சிவயோகி அவர்களின் இந்த விளக்கம் சித்தர் இலக்கியத்தை ஆய்வார்க்கு மிகவும் துணை புரிகின்ற கருத்துரையாகும்.

சித்தர்களின் மொழியிலே காட்சி என்று பேசப்படுவது அனைத்தும் அகக் கண்ணுக்குப் புலப்படுகின்ற காட்சியையே ஆகும். வடநூலார் புறக்கண்ணுக்குப் புலப்படுகின்ற தோற்றத்தை 'ரூபம்' என்றும், அகக் கண்ணுக்குப் புலப்படுவதைச் 'சொரூபம்' என்றும் அழைப்பார்கள். இதை விளக்குகின்ற சிவயோகியார் மாணிக்கவாசகருடைய சிவபுராணத்திலிருந்து கீழ்கண்ட அடிகளை மேற்கோள் காட்டுகிறார்.

உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே.

சிவயோகியார் மேற்கோள் காட்டுகின்ற மாணிக்கவாசகரின் இந்த வரிகள், சித்தர் இலக்கியத்தில் உள்ள ஞான இரகசியத்தை உள்ளுறை பொருளாகப் பொதிந்து வைத்துள்ளன. மெய்ச்சுடர் என்று மாணிக்கவாசகர் குறிக்கின்ற இந்தச் சோதியே சித்தர் இலக்கியம் கூறுகிற மெய் விளக்காகும்.

மெய்விளக்கு என்ற சொல்லுக்கு இரண்டு பொருள் உண்டு. ஒன்று மெய்யான, நிலையான விளக்கு என்பது; மற்றது மெய்யின்கண் காண்கின்ற விளக்கு என்பதாகும்; அதாவது இந்த உடலுக்குள்ளே அகக்கண் கொண்டு காணுகின்ற ஒளியாகும். சமய இலக்கியங்கள் இந்த ஒளியைக் காணும் பேரறிவை யோகத்தின் மூலம் காணலாம் என்று கூறும். இந்த யோகத்தை விரிவுபடுத்திப் பேசுகின்ற சித்தர் நூல்கள், இப்பயிற்சி முறையை 'ஓங்காரப் பயிற்சி' என்றும், 'பிரணவ யோகம்' என்றும் அழைக்கின்றன. இதனையே மோன நிலையில்

கரணங்கள் ஒடுங்கிய அந்தப் பேரொடுக்கத்தில் காணக்கூடிய பெருஞ்சோதி என்று அழைத்து, இந்தக் காட்சி நிலையைச் 'சும்மா இருத்தல்' என்று தாயுமானவர் கூறுவார். அருணகிரியாரும் இதனையே,

சும்மா இருசொல் லறவென் றலுமே
அம்மா பொருளொன் றுமறிந் திலனே

என்கிறார்.

திருப்புகழிலும் இதனை அருணகிரியார் பாடுகிறார்.

காவி யுடுத்துந் தாழ்சடை வைத்துங்
காடுகள் புக்குந் தடுமாறிக்
காய்கனி துய்த்துங் காயமொறுத்துங்
காசினி முற்றுந் திரியாதே
சீவ வொடுக்கம் பூத வொடுக்கம்
தேற வுதிக்கும் பரஞான
தீப விளக்கங் காண எனக்குன்
சீதள பத்மம் தருவாயே.

விவேகானந்தருடைய வாழ்க்கையில் அவர் இராகிருஷ்ண பரமஹம்சரை நேரிலே சந்தித்தபோது நடந்த நிகழ்ச்சியை இங்கே நினைவு கூறலாம். குருநாதன் சீடனைத் தன் முன்னே எதிர்வைத்து, பரிச தீட்சை என்ற தொட்டுக்காட்டும் உத்தியைக் கையாண்டு ஞான ஒளியைத் தூண்டினார். அந்த ஒரு வினாடியில் விவேகானந்தர் ஞானியாக எழுந்துவிட்டார்.

இதுவே மோனத்தில் ஞானத்தின் ஒளிகாணும் வித்தையாகும். இது கைவரப் பெறாதவர்கள் வாய் பேசாமல் மௌனியாக இருப்பதாலும், தாடியும் சடையும் வளர்த்துப் புறக்கோலம் பூண்டு திரிவதாலும் எத்தகைய பயனும் இல்லை.

ஞானக் கும்மியிலே சித்தர் இதனை மிகுந்த வேகத்தோடு பாடுகிறார்.

தாடி வளர்த்துச் சடைவளர்த்து - நல்ல
சந்நியாசி என்றொரு வேடமிட்டு
ஓடித் திரிந்த புலையாட்டை - இங்கு
ஒப்புவ தாரடி ஞானப் பெண்ணே!

என்பது ஞானக் கும்மி. புலையாடு என்பது வெள்ளாட்டை. அதற்குத் தாடி போன்ற 'அதர்' என அழைக்கப்படும் சதை தொங்கும். இந்தச் சதையைத் தான் திருமூலரும் வேறோர் இடத்திலே 'ஆட்டின் கழுத்தில் அதர்' என்றார்.

உண்மையான ஒளி ஞானம் என்பது ஞானகுருவானவன் சீடனுக்குத் தொட்டுணர்த்த வேண்டிய மெய்க்கூற்றின் இரகசியமாகும். உயிரின் சிறப்பறிவு விழிப்படையும்போது அந்த ஒளி அகக்கண்ணுக்குப் புலனாகிறது. உடனே தலையினுள்ளே அதிர்வு போன்ற ஓர் உணர்வு

அறிவும் பொருந்தியுள்ளது என்பதை அட்டமூர்த்தம் என்ற விளக்கினர். சமஷ்டி உருவம், வியஷ்டி உருவம் என்ற இரு சத்திகளையும் உகாரத்தில் அடக்கிக் காட்டினர். அதனால் நிராதார நிலையில் ஆகாய மண்டலத்தில் சர்வ வியாபகமான சிவசக்தியைச் சமஷ்டியாக்கி ஆத்மாவை வியட்டி நிலையை விட்டு மாற உபாயம் கூறினர். இவ்வித அகர உகர பாதங்களால் அமைவது ஓகாரம் என்ற பிரணவமாகும். பிரணவ ஞானமே உண்மையான ஞானம் என்று வேதங்கள் அறுதியிட்டுப் பிரணவத்தை வேத சிரசு என்று கூறிற்று. இத்தகைய பிரணவ உபாசனையைத் தோத்திரமுறையில் தமிழில் சிறப்புற விளக்குவது திருவாசகமும், சாத்திர முறையில் சிறப்புற விளக்குவது திருமந்திரமுமாகும்.

சிவயோகி அவர்களின் இந்த விளக்கம் சித்தர் இலக்கியத்தை ஆய்வார்க்கு மிகவும் துணை புரிகின்ற கருத்துரையாகும்.

சித்தர்களின் மொழியிலே காட்சி என்று பேசப்படுவது அனைத்தும் அகக் கண்ணுக்குப் புலப்படுகின்ற காட்சியையே ஆகும். வடநூலார் புறக்கண்ணுக்குப் புலப்படுகின்ற தோற்றத்தை 'ரூபம்' என்றும், அகக் கண்ணுக்குப் புலப்படுவதைச் 'சொரூபம்' என்றும் அழைப்பார்கள். இதை விளக்குகின்ற சிவயோகியார் மாணிக்கவாசகருடைய சிவபுராணத்திலிருந்து கீழ்கண்ட அடிகளை மேற்கோள் காட்டுகிறார்.

உய்யவென் னுள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா வெனவோங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம்விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி
மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந் தன்னை அகல்விக்கும் நல்லறிவே.

சிவயோகியார் மேற்கோள் காட்டுகின்ற மாணிக்கவாசகரின் இந்த வரிகள், சித்தர் இலக்கியத்தில் உள்ள ஞான இரகசியத்தை உள்ளுறை பொருளாகப் பொதிந்து வைத்துள்ளன. மெய்ச்சுடர் என்று மாணிக்கவாசகர் குறிக்கின்ற இந்தச் சோதியே சித்தர் இலக்கியம் கூறுகிற மெய் விளக்காகும்.

மெய்விளக்கு என்ற சொல்லுக்கு இரண்டு பொருள் உண்டு. ஒன்று மெய்யான, நிலையான விளக்கு என்பது; மற்றது மெய்யின்கண் காண்கின்ற விளக்கு என்பதாகும்; அதாவது இந்த உடலுக்குள்ளே அகக்கண் கொண்டு காணுகின்ற ஒளியாகும். சமய இலக்கியங்கள் இந்த ஒளியைக் காணும் பேரறிவை யோகத்தின் மூலம் காணலாம் என்று கூறும். இந்த யோகத்தை விரிவுபடுத்திப் பேசுகின்ற சித்தர் நூல்கள், இப்பயிற்சி முறையை 'ஓங்காரப் பயிற்சி' என்றும், 'பிரணவ யோகம்' என்றும் அழைக்கின்றன. இதனையே மோன நிலையில்